பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
19 03 2024 **TUESDAY** 7 15 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றும் நோக்குடன் பிஜேபி தலைமையிலான கூட்டணி அரசு செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாடு மாற்றத்தை விரும்புவதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

3. குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு இடைக்கால தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

4. அருணாச்சலப்பிரதேசம் தொடர்பான சீனாவின் கருத்துக்களுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

5. சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மூன்று இணைகள் இன்று பங்கேற்கின்றன.

>>>>><<<<<

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றும் நோக்குடன் பிஜேபி தலைமையிலான கூட்டணி அரசு செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் சேலத்தில் இன்று நடைபெற்ற பிஜேபி பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், 'வளர்ச்சியடைந்த பாரதம் - வளர்ச்சியடைந்த தமிழகம்' என்ற நிலை ஏற்பட பிஜேபி அரசு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றார்.

நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் உள்கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் மேம்பாட்டிற்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் இரண்டு இடங்களில் பாதுகாப்பு தொழில் வழித்தடங்கள் உருவாக்கப்படுவதாகவும், அதில் ஒன்று தமிழகத்தில் அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். நாடுமுழுவதும் 7 இடங்களில் அமைக்கப்படும் ஜவுளிப் பூங்காக்களில் ஒன்று தமிழகத்தில் அமைக்கப்படுவதாகவும் அவர் கூறினார். இந்த திட்டங்கள் மூலம் தமிழகம் அதிக அளவில் பயனடையும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடு மாற்றத்தை விரும்புவதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

தில்லியில் இன்று நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி அரசின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி மேற்கொண்ட யாத்திரை நாடு தழுவிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மக்கள் சந்திக்கும் உண்மையான பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்துக்குப் பிறகு கட்சியின் மூத்த நிர்வாகிகள் திரு கே.சி.வேணுகோபால், திரு ஜெயராம் ரமேஷ் ஆகியோர் செய்தியாளர்களிடம் பேசினர்.

கட்சியின் தேர்தல் அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் திரு மல்லிகார்ஜுன் கார்கேவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அப்போது அவர்கள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு இடைக்கால தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இச்சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 237 மனுக்களை இன்று விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தலைமையிலான அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

மேலும் இந்த மனுக்கள் தொடர்பாக, மூன்று வாரத்தில் பதிலளிக்குமாறு அரசுக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், விசாரணையை ஏப்ரல் மாதம் 9ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

>>>>><<<<<

மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து, பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

ராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை முழுமையாக அமல்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. பிரவீன் குப்தா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பஞ்சாபில், நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தலை நடத்த அனைத்து நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சிபின் எமது செய்தியாளரிடம் கூறினார்.

மாநிலத்தில் உள்ள 24 ஆயிரத்து 443 வாக்குச்சாவடிகளில் 2 ஆயிர்த்து 416 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவற்றில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிபின் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலை ஒட்டி, ஜம்மு காஷ்மீரில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எல்லைப்பகுதி மாவட்டங்களான ரஜோரி மற்றும் பூஞ்ச்-ல் மத்திய ஆயுத காவல்படை வீரர்கள் கூடுதலாக பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் பணிகளில் 635 கம்பெனி துணை ராணுவப் படையினரை ஈடுபடுத்த தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

கூடுதல் படையினர் இம்மாத இறுதிக்குள் அந்த பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மத்திய அமைச்சரும் ராஷ்ட்ரீய லோக் ஜனசக்தி கட்சியின் தலைவருமான திரு பசுபதி குமார் பராஸ் தமது மத்திய அமைச்சர் பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் தமது கட்சிக்கு உரிய இடம் தரப்படவில்லை என்றார்.

கட்சியின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் அடுத்தக்கட்ட முடிவை அறிவிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<

அருணாச்சலப்பிரதேசம் தொடர்பான சீனாவின் கருத்துக்களுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், சீன பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் கூறியிருக்கும் கருத்துக்கள் ஏற்கமுடியாத, அடிப்படையற்ற வாதங்கள் என்றார்.

இதுபோன்ற கருத்துக்களை சீனா அடிக்கடி கூறி வருவதாக அவர் தெரிவித்தார்.

அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், அங்கு வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும், அதன் மூலம் மக்கள் பெருமளவு பயனடைவார்கள் என்றும் திரு. ரன்தீப் ஜெய்ஸ்வால் கூறினார்.

>>>>><<<<<

தேசிய நெடுஞ்சாலையியில் விமானத்தை தரையிறக்கும் சோதனையை ஆந்திர மாநிலம், பாபட்லாவில் விமானப்படை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அடாங்கி பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் விமானப்படையின் ஏஎன்-32 மற்றும் டோர்னியர் விமானங்கள் தரையிறக்கப்பட்டு மீண்டும் வானில் பறந்ததாக விமானப்படை தெரிவித்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலை 16-ல் நான்கு கிலோமீட்டர் தூரத்திற்கு 33 மீட்டர் அகலத்தில் இதற்கான பிரத்யேக சாலை அமைக்கப்பட்டுள்ளத.

ஆந்திர மாநிலத்தில் இந்த வசதி முதல்முறையாக அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், பேரிடர் மீட்பு அவசர காலங்களில் விமானங்களை எளிதில் தரையிறக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

மகாராஷ்டிர மாநிலம் கட்சிரோலியில் காவல்துறையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் நக்ஸலைட்டுகள் 4 பேர் கொல்லப்பட்டனர்.

தெலங்கானாவில் இருந்து சில நக்ஸலைட்டுகள் பிரன்ஹிதா நதியைக் கடந்து கட்சிரோலிக்குள் நுழைந்துள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதியில் காவல்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர்.

இன்று காலை ரேப்னபள்ளி அருகே உள்ள மலைப்பகுதியில் நடைபெற்ற சோனையின்போது நக்ஸலைட்டுகள் சிலர், காவல்துறையினர் மீது துப்பாக்கியால் சுட்டனர்.

காவல்துறையினர் நடத்திய பதில் தாக்குதலின்போது அந்த 4 பேர் உயிரிழந்தனர். அவர்களை பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு தலா 36 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாக காவல்துறை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் இருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவில் மேகன் புயல் காரணமாக அந்நாட்டின் வடபகுதியில் பலத்த காற்றுடன் கனமழை பெய்துள்ளது..

இந்த புயல் வரும் நாட்களில் அந்நாட்டின் வடபகுதி வழியாக மேற்கு நோக்கி நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த புயல் காரணமாக அப்பகுதியில் அடுத்த ஒரு நாளில் 20 சென்டிமீட்டருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில், ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் **Marwan Issa** உயிரிழந்துள்ளார்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan** இத்தகவலை தெரிவித்துள்ளார்.

காஸாவில் மத்தியப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

**>>>>><<<<<**

ஹைத்தி-யில் ஆயுதம் ஏந்திய கும்பல் வன்முறையில் ஈடுபட்டதில் 10 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் **Port Au Prince-**ன் புறநகர் பகுதியில் அந்த கும்பல், வீடுகள், வங்கி மற்றும் பெட்ரோல் பங்க் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தியதாக உள்ளூர் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மற்றொரு பகுதியில் துப்பாக்கிச் சூடு மற்றும் பொதுச் சொத்துக்களை சூறையாடும் சம்பவங்களும் நிகழ்ந்தாக தகவல் வெளியாகியுள்ளது.

**>>>>><<<<<**

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் 3 இணைகள் இன்று பங்கேற்கின்றன.

**Basel** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இன்றிரவு நடைபெறவுள்ள ஆட்டங்களில் இந்தியாவின் **Rutuparna Panda – Swethaparna Panda** இணை இந்தோனேஷிய இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் **Simran Singhi – Ritika Thakar** இணை மற்றொரு இந்தோனேஷிய இணையையும்,

**Ahwini Bhat - Shika Gautam** இணை ஹாங்காங் இணையையும் எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் குல்ஷன் குமார் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>END<<<<<**